# 17 ஈழத்துச் சைவமரபு

திருமூலராற், சிவபூமி என்று சிறப்பிக்கப் பெற்றது எமது நாடு. மிகத் தொன்மையான காலத்திலே எமது நாட்டில், ஐந்து ஈஸ்வரங்கள் இருந்ததாக வரலாறு குறிப்பிடுகின்றது. இந்தப் புராதன சிவாலயங்களுள் வடக்கே நகுலேஸ்வரமும் கிழக்கே திருக்கோணேச்சரமும் மேற்கே முன்னேஸ்வரமும் வடமேற்கே திருக்கேதீஸ்வரமும் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. எமது நாட்டின் தெற்கே தெய்வந்துறையில் சந்திரசேகர ஈஸ்வரம் என்ற சிவாலயம் இருந்ததாக அறிகின்றோம்.



*திருக்கேதீஸ்வரம்*




*கொக்கட்டிச்சோலைத் தான் தோன்றீஸ்வரம்*

இவ்வாலயங்களில், திருக்கேதீஸ்வரம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார் ஆகிய இருவராலும், திருக் கோணேச்சரம் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாராலும் தேவாரம் பாடப்பெற்ற சிறப்புக்குரியன. இந்த ஆலயங்களைத் தவிர, கொக்கட்டிச்சோலைத் தான்தோன்றீஸ்வரம், ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரம் என்பனவும் எமது நாட்டிலுள்ள முக்கியமான சிவாலயங்களாகும்.


சிவநெறி தழைத்தோங்கும் எமது நாட்டில் அம்மன் ஆலயங்கள் பல உள்ளன. அம்மன், பராசக்தி, பூரணி எனப் பல நாமங்களால் அடியார்களால் போற்றப்படுகின்றாள். எமது நாட்டில் உள்ள அம்மன் ஆலயங்களில் நயினை நாகபூசணியம்மன் ஆலயம், தெல்லிப்பழை துர்க்கையம்மன் ஆலயம், மாத்தளை முத்துமாரியம்மன் ஆலயம், திருகோணமலை பத்திரகாளி அம்மன் ஆலயம் முதலானவை புகழ் பெற்ற அம்மன் ஆலயங்களாக விளங்குகின்றன. இது போலவே, சிறப்புடைய விநாயகர் ஆலயங்களும் இலங்கை முழுவதும் அமைந்துள்ளன.



*நயினை நாகபூசணியம்மன் ஆலயம்*



மண்டூர் முருகன் ஆலயம்



நல்லூர் கந்தசாமி ஆலயம்

முருக வழிபாடு பழந்தமிழர் வழிபாடாகும். இலங்கையில் கதிர்காமம், மண்டூர், செல்வச்சந்நிதி, நல்லூர், மாவிட்டபுரம், வெருகல், திருக்கோயில், உகந்தைமலை, போரதீவு, சித்தாண்டி, தாந்தாமலை என்னும் இடங்களில் புகழ் பெற்ற முருகன் ஆலயங்கள் அமைந்துள்ளன. பேராதனைக் குறிஞ்சிக் குமரன் ஆலயமும் இவற்றில் அடங்கும்.

**யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே**
**மாதொரு பாகனார் தாம் வருவார்**

என்ற சிவஞான சித்தியாரின் கூற்றினை எமது நாட்டுச் சமய மரபில் காண முடியும். சிவன் ஆலயம், அம்மன் ஆலயம், விநாயகர் ஆலயம், முருகன் ஆலயம் என தனித்தனி ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ள போதும், அவை அனைத்தையும் சிவ பரம்பொருளாகவே பார்க்கும் சிவநெறி எமது நாட்டிலே ஆழமாக வேரூன்றி உள்ளது. இது ஈழத்துச் சைவமரபின் தனித்துவமாகும்.

## பயிற்சிகள்

**01. பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. இலங்கையில் தான்தோன்றீஸ்வரர் ஆலயங்கள் எங்கெங்கு அமைந்துள்ளன?
2. சிவபூமி என்று இலங்கையைச் சிறப்பித்துக் கூறியவர் யார்?
3. இலங்கையிலுள்ள சிவாலயங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக.
4. இலங்கையிலுள்ள அம்மன் ஆலயங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக.
5. இலங்கையிலுள்ள முருகன் ஆலயங்கள் மூன்றின் பெயர்களை எழுதுக.

**02. பின்வரும் ஆலயங்கள் அமைந்துள்ள இடங்களைக் கண்டறிந்து, அவற்றை எழுதுக.**

1. நகுலேஸ்வரம் - ..............................................
2. திருக்கோணேச்சரம் - ..............................................
3. முன்னேஸ்வரம் - ..............................................
4. திருக்கேதீஸ்வரம் - ..............................................
5. குறிஞ்சிக் குமரன் ஆலயம் - ..............................................

## பாடச்சுருக்கம்

- இலங்கையைச் 'சிவபூமி' என திருமூலர் குறிப்பிட்டுள்ளார்.
- மிகத் தொன்மையான காலத்திலே எமது நாட்டில், ஐந்து ஈஸ்வரங்கள் இருந்தன.
- இலங்கையில் சிவாலயங்களுடன் அம்மன் ஆலயம், விநாயகர் ஆலயம், முருகன் ஆலயம் என்பனவும் உள்ளன.
- இலங்கையிலுள்ள சைவ சமயத்தவர், சிவனை மட்டுமன்றி அம்மன், விநாயகர், முருகன், வைரவர், விஷ்ணு முதலான தெய்வங்களையும் வணங்குவர்.

## செயற்பாடு

உமது பிரதேசத்திலுள்ள ஆலயம் ஒன்றுக்குச் சென்று அங்கு நடைபெறும் கிரியைகளை அவதானித்து அவற்றை அட்டவணைப் படுத்தி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.